T·C-113

120/DD/23

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# THE REVENUE TEST — PART – II
(With Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
## விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

## Part A

Write short notes on any **six** of the following.

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **(6 × 4 = 24)**

1. Write a note : Doravu wells.

   குறிப்பு எழுதுக : துரவு கிணறுகள்

2. Write a note : Mamul Waste.

   குறிப்பு எழுதுக : மாமூல் தரிசு

3. Define : Direct Cultivation.

   வரையறு : நேர்முக விவசாயம்

4. Explain the scope of the Revenue Standing Order No.24A for lease of Government land.

   அரசு நிலத்தை குத்தகைக்கு விடும் வருவாய் நிலை ஆணை எண்.24அ-ன் நோக்கத்தை விளக்குக.

5. What is mode of Exchange of Land at the disposal of the Government for private land?

   அரசு நிலத்தை தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்திற்கு பரிவர்த்தனை செய்து கொள்ளும் முறை என்றால் என்ன?

6. Write three classes of Patta Transfers in registry of holdings.

   நில உடைமைப் பதிவில் மேற்கொள்ளப்படும் மூவகையான பட்டா மாறுதல்களை எழுதுக.

7. Write a note: Form of Relinquishment of Ryotwari holdings.

   அரசுக்குடி நிலங்களின் உரிமையை விட்டுவிடும் ரயத்வாரி முறை குறித்து சிறு குறிப்பு எழுதுக.

8. What are the exceptional circumstances for suspension or remission of land revenue?

   எந்தெந்த வழக்கத்திற்கு மாறான சூழ்நிலையில் நிலத்தீர்வையினை நிறுத்தி அல்லது தள்ளி கொடுக்கலாம்?

## Part B

Answer any **six** questions only.

எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (6 × 6 = 36)

9. Write a note : Track Rent.

சிறு குறிப்பு வரைக : பாதைக் கட்டணம்.

10. Describe the power to re-enter in case of violation of conditionally assigned to scheduled castes.

அட்டவணை வகுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட நில ஒப்படையில் நிபந்தனை மீறப்பட்டால் நிலத்தில் பிரவேசிப்பதற்கான அதிகாரத்தை விவரி.

11. Briefly explain the sale of trees standing on the Government land by auction.

அரசு நிலங்களில் உள்ள மரங்களை ஏலத்தில் விற்பனை செய்யும் முறை குறித்து சிறு குறிப்பு எழுதவும்.

12. Write a note: Village Statistical Notes.

கிராமப் புள்ளி விவரப் பதிவேடு - குறிப்பு வரைக.

13. Write about the monetary limit of Revenue Officials for Land Alienation.

நில உரிமை மாற்றம் செய்து ஆணை பிறப்பிக்க வருவாய் துறை அலுவலர்களுக்கு உள்ள அதிகார வரம்பினை குறிப்பிடுக.

14. Write the special rules of land reserved under section 26 of Tamilnadu Forest Act 1882 in respect of Land Assignment.

நில ஒப்படை வழங்கும் நேர்வில் தமிழ்நாடு வனச்சட்டம் 1882ன் பிரிவு 26-ஐ அனுசரித்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நிலங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பு விதிகள் குறித்து எழுதவும்.

15. Describe the object of Jamabandi.

ஜமாபந்தியின் நோக்கத்தினை குறிப்பிடுக.

## Part C

Answer any **four** questions only.

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (4 × 10 = 40)

16. Explain about licenses for the use of water from Government sources for industrial and individual.

தனிப்பட்டவர்கள், தொழில் நிலையங்கள் அரசாங்க நீர்ப்பாசன ஆதாரங்களின் தண்ணீர் பயன்படுத்திக் கொள்ள பெற வேண்டிய உரிமங்கள் குறித்து விளக்குக.

17. Explain the procedure to be followed in the dealing with applications received for House Site Assignment in Village.

கிராமப்புறங்களில் வீட்டுமனை ஒப்படை கோரி வரப்பெறும் மனுக்களின் மீது எடுக்கப்பட வேண்டிய நடைமுறையினை விளக்குக.

18. Write a note on Issuance of notice under section 7 of the Tamilnadu Land Encroachment Act 1905.

தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் 1905-ன் பிரிவு 7-ன் கீழ் ஆக்கிரமிப்பை அகற்ற அறிவிப்பு செய்யும் முறையினை விவரிக்கவும்.

19. Explain the power of various authorities and general principles for Land Transfer to Central and State Government Departments.

மத்திய மாநில அரசு துறைகளுக்கு நில மாற்றம் செய்யும் அதிகார வரம்பு மற்றும் பொதுக் கொள்கைகளை விவரிக்கவும்.

20. Explain the issuance of the preliminary notification under section 15(2) of Tamilnadu Highways Act, 2001.

தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், 2001-ன் பிரிவு 15(2)-ன் கீழ் முதல்நிலை நில எடுப்பு அறிவிப்பு வெளியிடுதலை பற்றி விவரிக்கவும்.

---